[1991 சனவரி 21

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசியபோது சொன்னார்கள், வெளியிலே நடந்ததை வைத்துத்தான் டிஸ்குவாலிபிகேஷன் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே பாராளுமன்றத்தில் திரு. ஆரிஃப் முகமதுகான் அவர்களும், திரு. வி. சி. சுக்லா அவர்களும் ஜன் மோர்ச்சா என்று ஏற்படுத்திவிட்ட பிறகு கூட, $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் பதவியிலே இருந்து இருக்கின்ற.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவு வேண்டாம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவுதானே, சரி.

திரு. எஸ். டி. உகம்சந்த் வெளிநடப்புச் செய்தார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் அமைதியாக இருக்கவேண்டும்.

5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள், (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1991 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.